tnkalvi.online

No. of Printed Pages : **6**

6075

பதிவு எண்

பகுதி — III— சிறப்புத் தமிழ்

Part - III - ADVANCED LANGUAGE - TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'ஏட்டிலெழுதாக்கவிதை' என அழைக்கப்படுவது :
(அ) கீர்த்தனைகள் (ஆ) நாட்டார் பாடல்கள்
(இ) காப்பியப்பாடல்கள் (ஈ) சங்கப்பாடல்கள்

2. அலங்காரத்தோடும் ஓசையோடும் பாடுவோன் :
(அ) மதுர கவி (ஆ) சித்திர கவி
(இ) ஆசு கவி (ஈ) வித்தார கவி

3. **கூற்று :** மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம்.
காரணம் : தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபித்துவம்.
(அ) **கூற்று** சரி, **காரணம்** தவறு
(ஆ) **கூற்று, காரணம்** இரண்டும் தவறு
(இ) **கூற்று** தவறு, **காரணம்** சரி
(ஈ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-may-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

4. 'இயைபுக் குறும்பா' என அழைக்கப்படுவது :

(அ) லிமெரிக் (ஆ) ஹைக்கூ (இ) லிமெரைக்கூ (ஈ) சென்ரியூ

5. பின்வரும் கூற்றுகளில் **தவறானவற்றைச்** சுட்டுக.

(1) வாசகனை எந்த அளவிற்குக் கற்பனை செய்ய வைக்கிறதோ அந்த அளவிற்குச் சிறுகதை வெற்றி பெறுகிறது.

(2) சிறுகதையின் போக்கு ஓர்மை கொண்டதாக இருக்க வேண்டியதில்லை.

(3) சிறுகதையின் முடிவில் உள்ள திருப்பம் வாசிப்பவன் ஊகித்து அறியும் ஒன்றாக இருக்க வேண்டும்.

(4) ஒரு சிறந்த சிறுகதை அதன் கடைசி வரிக்குப் பிறகே வாசகனின் மனத்தில் மீண்டும் தோன்றும்.

(அ) (1), (3) மட்டும் (ஆ) (2), (3) மட்டும்

(இ) (2), (4) மட்டும் (ஈ) (1), (2) மட்டும்

6. வாசிப்பு அனுபவத்தின் தொடக்கமாக அமைவது :

(அ) குழந்தை இலக்கியம் (ஆ) சாகசக் கதைகள்

(இ) மெல்லுணர்வுக் கதைகள் (ஈ) பொழுதுபோக்குக் கதைகள்

7. பட்டாசுத் தொழிலாளர்களுக்குச் சம்பளக் கணக்கில் சேராது தனியாக வழங்கப்படும் உடனடித் தொகை :

(அ) கூடுதல் ஊதியம் (ஆ) போனஸ்

(இ) ஊக்கத் தொகை (ஈ) ரொக்கக் காசு

8. கரிசல் மண்ணின் வேளாண் வாழ்வியலை எழுதுபவர் :

(அ) ஜெயகாந்தன் (ஆ) சோ. தர்மன்

(இ) கே. பாலமுருகன் (ஈ) ஆர். சூடாமணி

9. நாடகத்தின் அடிப்படை அலகு :

(அ) காட்சி (ஆ) களம் (இ) உரையாடல் (ஈ) அங்கம்

10. 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என அழைக்கப்படுபவர் :

(அ) ஆர்.எஸ். மனோகர் (ஆ) சங்கரதாச சுவாமிகள்

(இ) பாலாமணி (ஈ) பம்மல் சம்பந்தனார்

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-may-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. களரி கட்டுக்குப் பிறகு தோன்றுகின்ற முதல் கதை மாந்தனை _____ என அழைப்போம்.

(அ) மேடைப் பேச்சாளர் (ஆ) இசைக் கலைஞன்

(இ) கட்டியக்காரன் (ஈ) நாடக ஆசிரியர்

12. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்' - இத்தொடர் உணர்த்துவது.

(அ) கவிதை எழுதக் காரிகை தேவையில்லை

(ஆ) கவிதை எழுதுவது எளிது

(இ) பேரிகை கொட்டினால் பிழைக்கலாம்

(ஈ) கவிதை எழுதுவது அரிது

13. பகைவரிடமிருந்து மதிலைக் காத்தல் _____ திணை ஆகும்.

(அ) நொச்சி (ஆ) வெட்சி (இ) உழிஞை (ஈ) காஞ்சி

14. சிலம்பரசன் அரசுப்பள்ளியில் படிக்கிறான், அவன் தம்பியும் அதே பள்ளியில் படிக்கிறான். இத்தொடரமைப்பு _____.

(அ) சுட்டுப்பெயர் + இயற்பெயர் (ஆ) இயற்பெயர் + இயற்பெயர்

(இ) சுட்டுப்பெயர் + சுட்டுப்பெயர் (ஈ) இயற்பெயர் + சுட்டுப்பெயர்

15. பாடும் குயில் - இப்பெயரெச்சத் தொடரில் இடையில் வருவதற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(அ) மெல்லிய (ஆ) கரிய (இ) வெள்ளை (ஈ) சிவந்த

16. தமிழ்நாட்டில் முதலில் வந்த நாளிதழ் எது ?

(அ) இந்தியா (ஆ) மதராஸ் மெயில்

(இ) சக்கரவர்த்தினி (ஈ) சுதேசமித்திரன்

17. மக்களாட்சியின் நான்காவது தூண் :

(அ) பாராளுமன்றமும், சட்டமன்றமும்

(ஆ) ஊடகம்

(இ) நீதிமன்றம்

(ஈ) அரசு நிர்வாகம்

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-may-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

18. 'குடி அரசு' என்னும் வார இதழைத் தொடங்கியவர் :
(அ) சி.பா. ஆதித்தனார் (ஆ) பாரதியார்
(இ) ஏ.என். சிவராமன் (ஈ) பெரியார்

19. _____ நிறுவனம் இணைய முகவரிப் பதிவை நிருவகிக்கிறது.
(அ) விப்ரோ (ஆ) மைக்ரோசாஃப்ட்
(இ) ஐகான் (ஈ) டெல்

20. பொருந்தாத இணையைக் கண்டறிக.
(அ) தமிழ்நெட் - தமிழ் 99 (ஆ) எழுத்துரு - ஒருங்குறி
(இ) விக்கிப்பீடியா - விக்கிமீடியா (ஈ) மோசில்லா - பிங்

பகுதி - II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

21. தொடக்க காலத்தில் தமிழில் புதுக்கவிதை முயற்சியை மேற்கொண்ட கவிஞர்கள் யாவர் ?

22. வானம் பாடிக் கவிஞர்களைப் பட்டியலிடுக.

23. சிறுகதையில் ஓர்மை என்றால் என்ன ?

24. இணையம் என்றால் என்ன ?

25. 'இறுக மூடிய கதவுகள்' கதையில் வரும் செல்லப்பாவின் தோற்றத்தை விளக்குக.

26. பேபி குட்டி – பெயர்க்காரணம் கூறுக.

27. எவையெல்லாம் நாடகத்தின் கருவாகின்றன ?

28. இறையனாரகப் பொருள் – குறிப்பு வரைக.

29. தொடரில் வேற்றுமையுருபுகள் மற்றும் வினைமுற்றுகள் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

30. காட்சித்துணுக்கு முறையினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-may-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

31. புதுக்கவிதையில் படிம உத்தியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

32. நாட்டுப்புறப்பாடல் பகுதியில் அமைந்துள்ள உவமையை விளக்குக.

33. சாகசக் கதைகளை வரையறுக்கவும்.

34. அகச்சித்திரிப்பு, புறச்சித்திரிப்பு – வேறுபடுத்துக.

35. குழந்தைகளின் உலகம் குறித்து ஆர். சூடாமணி விளக்குவது யாது ?

36. சிலப்பதிகாரம் குறிப்பிடும் மூவகை அரங்குகளை விளக்குக.

37. அணியிலக்கணம் தோற்றம் பெற்றதில் தொல்காப்பியத்தின் பங்கு யாது ?

38. குறும்பரப்பு வலைப்பின்னல் என்பதை விளக்குக.

39. தலையங்கம் – குறிப்பு வரைக.

40. வழுநிலை என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

41. (அ) விறகொடிக்கும் பெண்ணின் வாழ்வியலை நாட்டுப்புறப்பாடல் வழிநின்று விளக்குக.

அல்லது

(ஆ) 'கண்ணுள் மணியை' - பாடல் வழியாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-may-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

42. (அ) கதை சொல்லுதலின் உத்திகளை விளக்குக.

அல்லது

(ஆ) நசுக்கம் சிறுகதையில் இடம்பெறும் வட்டார மொழி வழக்குகளைத் தொகுத்து எழுதுக.

43. (அ) 'பேபி குட்டி' கதை வெளிப்படுத்தும் உறவுநிலை உணர்வுகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) நாடகத்தில் அங்கங்களை எவ்வாறு முடிவு செய்வாய் ?

44. (அ) 'மொழிக்கு அரணாக அமைவது இலக்கணம்' - இக்கூற்றை நடைமுறைப்பேச்சு வழக்குகள் கொண்டு விளக்குக.

அல்லது

(ஆ) சொல் நிலையிலும், தொடர் நிலையிலும் சொற்கள் அடுக்கி வருவதனை நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

45. (அ) புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் புறத் திணைகள் குறித்து விளக்குக.

அல்லது

(ஆ) செய்தித்தாளில் மூன்று வகை பக்க அமைப்புகளை விவரிக்கவும்.

46. (அ) ஆதித்தனாரின் எழுத்துநடை பற்றி சுஜாதா கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

அல்லது

(ஆ) இணையத்தளங்களின் வகைமைகளை விளக்குக.

47. (அ) தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தோற்றத்தையும் குறிக்கோளையும் எழுதுக.

அல்லது

(ஆ) தமிழ் உள்ளீட்டுத் தொழில் நுட்பம் குறித்து விளக்குக.

- o 0 o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-advanced-tamil-public-may-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share